Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி–06 | 22–07–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை–154



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12401) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# சிறிலங்கா சனாதிபதி தேர்தல் குறித்த

# அவுஸ். பிரதமர் கருத்திற்கு அநுரா கண்டனம்!



## அடுத்த வருட நடுப்பகுதியில் தேர்தலாம்

(கொழும்பு)

**சிறிலங்காவில் சனாதிபதித்தேர்தல் நடத்துவது பற்றி அவுஸ்திரேலிய பிரதமர் வெளியிட்ட கருத்தைத்தான் கண்டிப்பதாகவும், அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் குறித்த தினத்தில் சனாதிபதித்தேர்தலை நடாத்த உள்ளதாகவும் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க சர்வதேச சனநாயக சங்கத்திற்கு அறிவித்துள்ளார்.**

அவுஸ்திரேலியப்பிரதமர் ஜோன் ஹவேட்டின் தலைமையில் இயங்கும்சர்வதேச சனநாயக சங்கம் இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு சிறிலங்காவில் சனாதிபதித்தேர்தலை நடத்த வேண்டுமென ஒருமனதுடன் கோருவதாகக் கூறி வெளிவந்த ஊடக அறிக்கைக்குப் பதிலளிக்கும் வண்ணமே அநுரா இவ்வாறு கூறியுள்ளார்.

சிறிலங்கா சிறந்த சனநாயகம் நிலவும் சுதந்திர சமூகத்தை உடைய நாடெனவும் கூறிய அவர் சனாதிபதி சனாதிபதித் தேர்தல் குறித்த நெருக்கடிதொடர்ச்சியாக விவாதிக்கப்பட்டு வருவதாகவும் தான் சிரேஷ்ட அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர் என்ற ரீதியில் மாத்திரமன்றி இலங்கையர் என்ற வகையிலும் அவுஸ்திரேலியாப்பிரதமரின் கூற்றைக் கண்டிப்பதாகவும் அநுரா கூறியுள்ளார்.

# நிறைவேற்று அதிகாரத்தால் எஸ்.பியை விடுவிக்கக் கோரிக்கை

### மகிந்த விஜயசேகர சனாதிபதிக்குக் கடிதம்

(கொழும்பு)

எஸ்.பி.திஸநாயக்கவை சனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரத்தைப்பயன்படுத்தி விடுதலை செய்யுமாறு ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தவிஜேந்திர சேகர சனாதிபதியைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் சனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் எஸ்.பி.திஸநாயக்கவின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாதவண்ணம் நடவடிக்கை எடுக்குமாறும் சனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(IV ஆம்பக்கம் பார்க்க)

# அரச நிறுவனங்களைக் கண்காணிக்க விசாரணைப்பிரிவு விஸ்தரிப்பு

(கொழும்பு)

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுப் பொறுப்பில் இயங்கும் விசாரணைப்பிரிவின் சேவைகள் விஸ்தரிக்கப்படவிருக்கின்றன

இந்தப்பிரிவில் புதிதாக 35 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர் இவர்களிற்கு சீரான பயிற்சிகளை வழங்கி நாடுபூராவும் உள்ள மாவட்ட செயலகங்களில் நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

(IV ஆம்பக்கம் பார்க்க)

# அதிரடிப்படை மீது கைக்குண்டு வீச்சு

# 2 அதிரடிப்படையினர், ஒரு பொலிஸ் காயம்

## உரிமை கோருகிறது சீறும் படை

(கொழும்பு)

அக்கரைப்பற்று ஆலையடி வேம்புப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள தர்மசங்கரி விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற கைக்குண்டு வீச்சில் பொலிஸ் அதிரடிப்படையினர் மூவர் படுகாயமடைந்துள்ளனர். ஆலையடி வேம்பு றோமன் கத்தோலிக்க மிசன் நலன்புரி முகாமுக்கான பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த அதிரடிப்படையினர் மீது நேற்று நண்பகல் 12.15 மணியளவில் இந்தத்தாக்குதல் நடைபெற்றதாக நடவடிக்கைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்களில் ஒருவர் பொலிஸ்கான்ஸ்டபிள் எனவும் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. விசேட அதிரடிப்படையைச்சேர்ந்த எஸ்.பத்மராஜ், எஸ். ஆனந்தவீரசிங்கே, பொலிஸ் உத்தியோகத்தர் ரஞ்சித் ஆகியோரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் மூவரும் அம்பாறை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை இச்சம்பவத்துக்கு உரிமைகோரி சீறும்படை என்ற அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அண்மைக்காலமாகப் போராளிகள்

(IV ஆம்பக்கம் பார்க்க)

# பொலிசாரின் தேடுதல் நடவடிக்கை

# ஆலையடி வேம்பு, அக்கரைப்பற்றில் தீவிரம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டப் ... ரைப்பற்று, ஆலையடி வேம்புப் பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கை... நேற்றுத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

ஆலையடி வேம்பு- நலன்புரிமுகாமின் பாதுகாப்புக் கடமையிலீடுபட்டிருந்த அதிரடிப்படையினர் மீது நேற்று நண்பகல் இனந்தெரியாதோர் கைக்குண்டுத்தாக்குதலை நடத்தியதையடுத்து இத்தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்களைக் கண்டுபிடிப்பதற்காக இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகச் சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை,மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அண்மைக்காலமாக (IV ஆம்பக்கம் பார்க்க)

# பொருளாதார வீழ்ச்சியைத்தடுக்க

# நிலையான கொள்கை அவசியம்

### –உலக வங்கியின் சிறிலங்கா பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் அரசியல் நிலையற்றதன்மை காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சி அடையாது இருக்க வேண்டுமாயின் நிலையான பொருளாதாரக் கொள்கைகளைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென உலக வங்கியின் சிறிலங்காவிற்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர்ஹரோல்ட் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கைத்தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; அரசாங்கங்கள் மாறும்போது கொள்கை மாறுவது சிறிலங்காவின் பொருளாதார அபிவிருத்திக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஆனால், பொருளாதாரக்கொள்கைகளை அடிக்கடி மாற்றாது தொடர்ச்சியாக பல வருடங்களுக்கு நடைமுறைப்படுத்துவதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# லண்டனில் மீண்டும் 4 குண்டுகள் வெடித்தன

# ஒருவர்காயம்; இருவர் பொலிசாரால் கைது

## 3 சுரங்கப்பாதையில் ரயில் சேவை நிறுத்தம்

(லண்டன்)

லண்டனில் நேற்று நான்கு சிறிய குண்டுகள் வெடித்துள்ளன. இதன்போது ஒருவர் சிறுபாதிப்புக்குள்ளாகியுள்ளார். உயிர்ச்சேதமோ மற்றும்' பாதிப்புக்களோ ஏற்படவில்லை.

இந்தக்குண்டுகளில் ஒன்று இரட்டைத்தட்டுப்பேருந்து ஒன்றின் இருக்கையில் நடந்ததாகவும் இதன்போது அந்தக்குண்டு வைக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படும் சிறிய பயணப்பை பிரிந்த நிலையில அதிலிருந்து வாசனை நிரம்பிய புகை எழுந்ததாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இந்தக்குண்டுகளில் இரசாயனப் பொருட்கள் எதுவும் பாவிக்கப்படவில்லையெனவும் லண்டன் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை மற்றைய குண்டுகள் மூன்றும் சுரங்க ரயிலில் வெடித்துள்ளதாகவும் இதனால் பாதிப்பு எதுவும் ஏற்பட்டதாக இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

இந்தக்குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக லண்டன் பிரதமர் ரொனிபிளேயர் கூறுகையில், இத்தகைய சம்பவங்களை ஒரேயடியாகக் குறைக்க முடியாதெனவும் அவை மக்களைப் பயமுறுத்துவதற்காக மேற்கொள்ளப்படுபவை எனவும், முடிந்தவரை வழமைபோல் அன்றாட நடவடிக்கைகளைத் தொடரவேண்டியது அவசியமெனவும் அவர் கூறியுள்ளார்.

(IV ஆம்பக்கம் பார்க்க)

# நேற்றைய குண்டுவெடிப்பையடுத்து லண்டனில் அவசரகால நிலை பிரகடனம்

(லண்டன்)

லண்டனில் நேற்று நடைபெற்ற குண்டு வெடிப்புக்களை அடுத்து அங்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பேருந்து ஒன்றினுள்ளும் சுரங்க ரயில்களிலும் நேற்றுச் சிறிய ரக குண்டுகள் நான்கு வெடித்ததை அடுத்தே லண்டன் அரசு அங்கு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி உள்ளாதாகக் கூறப்படுகிறது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வலது குறைந்தோருக்கான முச்சக்கர மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. பதிவு செய்யப்படாதது நா.இரத்தினராசா அளம்பில் மோட்டர் கியர் நியூ மொடல் சாளி நிறம் சிவப்பு. (6190)

## காணிவிற்பனைக்கு

இல. 79,B. 1ஆம் குறுக்கு, 8ஆம் வாய்க்கால், உருத்திரபுரம். குடியிருப்புக்காணி ஒன்றரை ஏக்கர் 22அடி விட்ட கிணறும் தென்னை,பனை மாமரமும் கல்வீடும் உள்ளது. வயல் நிலம் 2 ஏக்கர் இரண்டு போகஞ் செய்யக் கூடியது. தொடர்பு:- திரு R.. சிறிகாந்தன் 210,ஜெயந்திநகர், கிளிநொச்சி. தொடர்பு:- சி.கிருஷ்ணானந்தன் முள்ளிவாய்க்கால் மேற்கு, முல்லைத்தீவு. (6193)

## தவறிவிட்டது

17.07.2005 அன்று இரவு கனகபுரம் பாடசாலைச்சந்திக்கும் கிளிநொச்சி A9 சாலை அறிவமுது புத்தகசாலைக்கும் இடையில் கறுப்புநிற நூல் கயிறு கட்டப்பட்ட Dvrx Flowyer and Voice Recorder(ஒலிப்பதிவு சாதனம்) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது பசுந்தீவு அரைக்கும் ஆலை இரத்தினபுரம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6374)

# 20 அடி பள்ளத்தில் சிற்றூர்தி பாய்ந்தது இருபத்தைந்து பயணிகள் காயம்

தலவாக்கலையில் இருந்து நுவரெலியா நோக்கிச் சென்று கொண்டிருந்த சிற்றூர்தி ஒன்று பாதையைவிட்டு விலகி இருபதடிப் பள்ளத்தில் வீழ்ந்ததால் இருபத்தைந்து பேர் காயமடைந்துள்ளனர்.

நுவரெலியா நாணோயாவில் நேற்றுக் காலை 8.15 மணியளவில் நடந்த இந்த விபத்தின்போது குறித்த சிற்றூர்தியில் 35 பேர் பயணம் செய்துள்ளனர். இவர்களில் காயமடைந்த இருபத்தைந்து பேர் நுவரெலிய டின்டுல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மாட்டு வண்டிச்சவாரிப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் கிளி/மாவட்ட மாட்டு வண்டி சவாரிச்சங்கத்தினால் நடாத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச்சவாரிப் போட்டி

இடம்:- வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடல்

காலம்:- 2005-07- 24 ஆம் திகதி ஞாயிறு பி.ப.1மணி

போட்டிகள் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகளாக நடைபெறும். மது பாவனை முற்றாகத்தடைசெய்யப்பட்டுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சங்கத்தினர்.

(6378)

## 07 ஆம் ஆண்டு நினைவில்....



பிறப்பு:- 10 - 12 - 1978

வீரச்சாவு:- 22 - 07 - 1998

2ஆம் லெப்ரினன்ட்
**கரிகாலன்**
தர்மலிங்கம் முரளிதரன்
(ஆனந்தபுரம், கிளிநொச்சி)

தம்பி கரிகாலா புகழ்சொட்டும் தமிழ்
புழுதிமண்ணில் தவழ்ந்தவன் நீ
வீரம் விளை வீதிகளில் விடுதலை மூச்சோடு
நிமிர்ந்த உன் பாதச்சுவடுகளில்
நித்தம் தேடிவந்து எம்கால நினைவுகளின்
கண்ணீர் துளிகளை நொந்து சொரிகின்றோம்
உன் நீண்டநினைவுகளில் நாம் நெஞ்சம் நிறைகின்றோம்
நிம்மதியாய் தூங்கு நாங்கள் இருக்கின்றோம்
உன் உணர்வுகளோடு சங்கமித்தபடியே
எம் நெஞ்சுக்குழிகளில் நிறைந்த உன் நினைவுகளில்
நாங்களிருக்கின்றோம்.

13,ஆனந்தபுரம்,
கிளிநொச்சி,
தொ.பே.2285824

(6376)

தங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பம் கோரல்

*01. ஆங்கில போதனாசிரியர்:-*

*தகைமை:-*

க.பொ.த. உயர்தரத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.அல்லது அதற்குச் சமனான (G.A.Q) பரீட்சையில் சித்தியும் ஐந்து வருடத்திற்கு குறையாத அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

*02. கணனி போதனாசிரியர்*

*தகைமை:-*

கணனியில்; m.s. office முடித்திருப்பதுடன் இரண்டு வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்

*03. அலுமினிய பொருத்துகைப் போதனாசிரியர்*

*தகைமை:-*

அலுமினிய பொருத்துதல் பயிற்சி முடித்த சான்றிதழ் உள்ளவராகவும் இரண்டு வருட அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்

*04. தையல் பயிற்சி உதவி ஆசிரியர்*

*தகைமை:-*

தையல் பயிற்சி சம்பந்தமாக சான்றிதழ் பெற்றிருப்பதுடன், இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.


மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் அதிபர்,முல்லை-தொழில் நுட்பக்கல்லூரி முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 25.07.2005இற்கு முன்பாக நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:- 28.07.2005 காலை 9.00மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு சகல ஆவணங்களுடனும் சமூகமளித்தல் வேண்டும்.

**க.வைரமுத்து, அதிபர்,**
**முல்லை- தொழில் நுட்பக்கல்லூரி,**
**முல்லைத்தீவு.**

(சி-12376)

## சாவு அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 | 19 |
| □ | □ |
| 01 | 07 |
| □ | □ |
| 1926 | 2005 |

அமரர்

### சரவணமுத்து சிவஞானசுந்தரம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, வட்டக்கச்சி, கட்சன்வீதி 898 இலக்க வீட்டில் வசித்துவருமான சரவணமுத்து சிவஞானசுந்தரம் 1_.07.2005 இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மல்லாகம் சரவணமுத்து (ஓவசியர்) பர்வதம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சங்கானை மேற்கு சின்னத்துரை அன்னபூரணம் தம்பதிகளின் மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், திருக்கேதீஸ்வரன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகஸ்தரும், யதுர் என்ரபிறைஸ் நிறுவனப் பணிப்பாளர்), சுந்தரராசன் (தொலைத்தொடர்பகம் வட்டக்கச்சி), சியாமளராணி (திருவையாறு), சச்சிதானந்தராசா (கனடா), நித்தியானந்தராசா (யதுர் என்ரபிறைஸ் நிறுவனம்), தியாகேந்திரன் (உரிமையாளர் நிலான் பல்பொருள் வாணிபம், கிளிநொச்சி), காலஞ்சென்ற லோகரோஜினிதேவி (லெப்ரினன் உசா), அமுதகாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தாதேவி (தாதிய உத்தியோகஸ்தர் பொதுவைத்தியசாலை வவுனியா), சுபத்திரா, குணராசா (உரிமையாளர் பொற்கொடி அரிசிஆலை வில்சன்வீதி திருவையாறு) உமாதேவி (கனடா), ரஞ்சினி,சுதாஜி ஆகியோரின் மாமனாரும், தம்பையா (ஓவசியர்), காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னத்தங்கம், சரஸ்வதி( ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகஸ்தர்), அன்னலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23.07.2005 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மம்மில்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

(6379)

**வன்னியின் இறுதி மன்னன்**
**மாவீரன் பண்டாரவன்னியனின்**
**202ஆவது நிறைவு-நினைவு வெற்றிவிழாவைச் சிறப்பிக்கும்**

## கவிதை, கட்டுரை, ஓவியப்போட்டிகள் -2005.08.25

01) மேற்படி போட்டிகள் யாவும் திறந்த போட்டிகளாக நடைபெறும்.
02) ஆர்வமுள்ளோர் பங்குபற்றலாம்.
03) கவிதை, கட்டுரைப் படைப்புக்கள் 15-08-2005இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
04) பங்குகொள்ளும் போட்டியாளர்கள் தமது படைப்புப் பிரதியில் சொந்தப் பெயர், முகவரி எழுதாது தனியான தாளில் எழுதி இணைத்துப் பாதுகாப்பான உறையில் இட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
05) ஓவியப் போட்டிப் பிரதிகள் யாவும் நேரடியாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.
06) முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழும், பெறுமதியான பரிசில்களும் 25-08-2005 அன்று கற்சிலைமடுவில் நடைபெறும் விழா மேடையில் வழங்கிக் கௌரவிக்கப்படும்.
07) தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

***போட்டி நிபந்தனைகள்:***

01) கவிதைகள்:-

தலைப்பு : "வன்னி மன்னவனின் சுகந்திர தாகம்"

கவிதைப் போட்டிகள் மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக் கவிதையாகவோ அமையலாம். ஒவ்வொரு வகையும் தனித்தனிப் போட்டிகளாகக் கணிக்கப்படும். கவிதைகள் புஸ்காப் தாளில் (கோட்டுத் தாள்) 60-80 வரிகளுக்குள் அடங்கல் வேண்டும்.

02) கட்டுரை:-

தலைப்பு: "அன்றைய பண்டாரவன்னியனின் வீரவேட்டையும், இன்றைய தமிழ் சமூகத்தின் விடுதலை வேட்கையும்."

ஆக்கங்கள் 800 சொற்களுக்குக் குறையாமலும்1000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

03) ஓவியம்:-

பின்வரும் எண்ணக்கருக்களை உடையதாக இருத்தல் வேண்டும்.

01) பண்டாரவன்னியன் வாழ்க்கை வரலாறு பாரம்பரியத்தின் ஒரு மைல்கல்.
02) தமிழர் பாரம்பரியத்தில் இரண்டறக் கலந்திருக்கும் தமிழரின் வீரப் பண்பு வெளிக்கொணரப்படல் வேண்டும்.

குறிப்பு : ஓவியம் பிறிஸ்ரல் போட்டில் வரைந்து பொருத்தமான வர்ணம் தீட்டி அனுப்பப்படல் வேண்டும்.

தகவல் : விழாக் குழு,
பிரதேச செயலகம்,
ஒட்டுசுட்டான்

(சி-12345)

## சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால்

## செட்டிகுளத்தில் பொதுமக்கள் அச்சுறுத்தல்

(வவுனியா செய்தியாளர்)

சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் செட்டிகுளம் பகுதியில் பொதுமக்களை அச்சுறுத்தி வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் வீரபுரம் பகுதிக்கு அதிவேக உந்துருளிகளில் வருகை தந்த ஏழு சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரும் ஒரு சிறிலங்காப் பொலிசாரும் அப்பகுதியில் இருந்த மக்களை அச்சுறுத்தியுள்ளனர்.

தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், போராளி குடும்பம் போன்றவர்களின் வீடுகளிற்கு சென்ற இவர்கள் பொதுமக்களை ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தியதாகவும், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்கக் கூடாது என வற்புறுத்தியதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (10)

## கடலோரப் பாதுகாப்பு எல்லை கல்முனை பிரதேசத்தில் தளர்வு!

(கொழும்பு)

கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு மட்டும் கடலோரப் பாதுகாப்பு எல்லையை 200 மீற்றர் தடையிலிருந்து 100 மீற்றராக்கியுள்ளதாக அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக சனாதிபதி தமக்கு எழுத்து மூலம் அறிவித் துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 100 மீற்றர் தடையை சாய்ந்தமருது, காரைதீவு, நிந்த வூர் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் அமுல்படுத்துமாறும் சனாதிபதியிடமும், நகர அபிவிருத்தி அதிகார சபையிடமும் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அமைச்சர் பேரியல் அஷ்ரப் மேலும் தெரிவித்தார். (32)

## சனாதிபதித்தேர்தலை வலியுறுத்தி ஐ.தே.க. கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தலை இவ்வருட இறுதியில் நடத்த வலியுறுத்தி ஐக்கிய தேசியக்கட்சி கையெழுத்து வேட்டையொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று கையொப்பம் சேகரிப்பதுடன் வேலைஸ்தலங்களுக்கும் சென்று தொழிலாளர்களின் கையொப்பங்களைப் பெறுவதற்கும் ஐ. தே.க. தீர்மானித்துள்ளது.

ஒகஸ்ட் மாத இறுதியில் இப்பணி முடிவடைந்தவுடன் சனாதிபதியிடம் இது கையளிக்கப்படும். இதற்குள் சனாதிபதித்தேர்தல் நடக்கும் நாட்களை அறிவிக்காவிட்டால் நாடு தழுவிய மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் சனாதிபதிக்கு எதிராக ஆரம்பிக்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சி அரசியல் பீடம் தெரிவித்துள்ளது.

## மின்சாரசபை மறுசீரமைப்பு குறித்த அறிக்கையை அமைச்சரவை பரிசீலனைக்கெடுக்க உத்தேசம்

(கொழும்பு)

சிறிலங்கா மின்சார சபையை மறுசீரமைத்தல் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அமைச்சரவையினால் பரிசீலனைக்காக எடுக்கப்படவுள்ளதாக மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள்ளார். அடுத்த அமைச்சரவை அமர்வின்போது பரிசீலனைக்கு எடுக்கப்படும் இந்த விடயம் அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்த அறிக்கையை தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என இரு தொழிற்சங்கங்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளன.

இந்த அறிக்கைக்கு தமது ஒப்புதலைத் தெரிவிக்கும் பட்சத்தில் சிறிலங்கா மின்சாரசபை தனியார் நிறுவனமாக மாறுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாக இந்த இரு தொழிற்சங்கங்களும் அஞ்சுகின்றன.

அதேவேளை, இந்த பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவரும் நோக்கில் ஏனைய தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன. அதேவேளை, இந்த விடயம் தொடர்பாக சிறிலங்கா மின்சார சபையின் பொறியியலாளரும் தொழிற் சங்கத்தின் தலைவருமான ஆனந்தபியதிலக கருத்துத் தெரிவிக்கையில்; அடிக்கடி சகல தொழிற்சங்கங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் ஒருமித்த கருத்தை எட்ட நினைக்கிறோம்.

ஒருமித்த கருத்தை நாம் எட்டத் தவறும் பட்சத்தில் பெரும்பான்மையான தொழிற்சங்கங்களின் கருத்துக்கமைய சிறிலங்கா மின்சார சபையை சீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

## பயணிகள் சிற்றூர்தியில் ரவைகள் கண்டுபிடிப்பு

### -புத்தளத்தில் இருவர் கைது-

வண்ணாவில்லுப் பகுதியில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் சிற்றூர்தி ஒன்றில் ரீ 56 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 40 ரவைகளும், கிரனைட் செலுத்திக்கு பயன்படுத்தக்கூடிய பத்து ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனையடுத்து குறித்த சிற்றூர்தியின் ஓட்டுநரும் நடத்துனரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இது பற்றிய விசாரணைகளை புத்தளம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (32)

## எரிபொருளை எடுத்துச் செல்ல படையினர் அனுமதி மறுப்பு!

(வவுனியா செய்தியாளர்)

கொக்கட்டிச்சோலை எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு எரிபொருளை எடுத்துச்செல்ல படையினர் அனுமதி மறுத்துள்ளனர். இராணுவக் கட்டுப் பாட்டுப்பகுதியில் உள்ள ஆலடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள கொக்கட்டிச்சோலையில் எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்தி வருகின்றது. எரிபொருள் விற்பனை நிலையத்திற்குத் தேவையான எரிபொருளை எடுத்துச் செல்ல இவ்வளவு காலமும் அனுமதி வழங்கிய இராணுவம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் அனுமதி மறுத்துள்ளது.

கொக்கட்டிச்சோலைக்கு எரிபொருளை எடுத்துச் சென்ற வாகனத்தை பட்டிருப்புப் பாலத்தில் வழிமறித்த படையினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இதனைத் தடுக்கும் அதிகாரம் தமக்கு உள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இதனால் களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, கொக்கட்டிச்சோலை பிரதேச மக்கள் எரிபொருள் தட்டுப்பட்டை எதிர்நோக்குகின்றனர். (10)

## பொதுநோக்கு மண்டபம் சுதந்திரபுரத்தில் திறப்பு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு- சுதந்திரபுர மத்தி பொது நோக்கு மண்டப திறப்புவிழா நிகழ்வு சுதந்திரபுரம் கிராம அலுவலர் சுந்தரலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. நிகழ்விற்கான மங்கல விளக்கினை உடையார்கட்டு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் டிகழரசன், கிராம அலுவலர் சிவராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர். பொதுநோக்கு மண்டபத்தை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்தா திறந்துவைத்து கருத்துரை வழங்கினார்.

மேற்படி பொதுநோக்கு மண்டபம் நியாப் திட்ட உதவியுடன் சுமார் ஆறு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது.

### -வவுனியா- தோணிக்கல்லில்-

## முன்னாள் ரெலோ உறுப்பினரின் வீட்டை நோக்கி கைக்குண்டு வீச்சு

வவுனியா தோணிக்கல்லில் முன்னாள் ரெலோ உறுப்பினர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று அதிகாலை 2.05 மணிக்கு கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. ரெலோ அமைப்பில் இருந்து விலகி தற்போது பிரான்சில் வசித்து வரும கம்பிளிக்குமார் என்பவரின் வீட்டின் மீதே கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. கைக்குண்டு வீசப்பட்டபோது அவ்வீட்டினுள் கம்பளிக்குமாரின் மனைவி, பிள்ளைகள் ஆகியோர் படுத்துறங்கிக் கொண்டிருந்தனர். கைக்குண்டு வீட்டில் இருந்து பத்து அடி தூரத்தில் விழுந்து வெடித்துள்ளது. இதனால் வீட்டிற்கு சிறுசேதம் ஏற்பட்டுள்ளது. வீட்டினுள் இருந்தவர்கள் எவரும் இதனால் பாதிக்கப்படவில்லை. (10)

## உடையார்கட்டு- சுதந்திரபுரம் மத்தியில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு சுதந்திரபுரம் மத்தியில் எல்லைப்படை மாவீரர் குடும்பம் மற்றும் மாவீரர் குடும்பம் கௌரவிப்பு நிகழ்வு சுதந்திரபுரம் கிராம அலுவலர் சுந்தரலிங்கம் தலைமையில் அலங்கரிக்கப்பட்ட மைதானத்தில் இடம்பெற்றது.

இங்கு மாவீரர் குடும்பங்கள் வரவேற்கப்பட்டு எல்லைப்படை மாவீரர்,மாவீரர் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்ட பிரத்தியேக பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தொடர்ந்து திருவுருவப்படங்களிற்கு உரித்துடையோரால் மலர் மாலை அணிவித்து சுடர்ரேற்றப் பட்டது.

நிகழ்விற்கு கருத்துரைகளை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்தா, புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிபேரவை துணைச் செயலர் சிவராசா, தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் வழங்கினார்.

கௌரவிப்பு நிகழ்வில் துரோணர் முன்பள்ளி, பார்[illegible] இல்லம் ஆகியவற்றின் மாணவர்களின் இசையும் [illegible]சைவும் நிகழ்ச்சி, சங்கநாதம் நிகழ்வு போன்றவை இடம்பெற்றதுடன். இப்பகுதியில் நடைபெற்ற பொது அறிவுப்போட்டியில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்களும், எல்லைப்படை மாவீரர் நினைவு நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட தாச்சி போட்டியில் வெற்றிபெற்ற விளையாட்டு கழகங்களிற்குபரிசு வழங்கலும் இடம்பெற்றன. (19)

## துயர் பகிர்வு

### சரவணமுத்து சிவஞானசுந்தரம்




எமது நிறுவனத்தின் பணியாளரான சி.சுந்தரராஜ் (ஸ்ரீபன் வட்டக்கச்சி பிரதேச சர்வதேச தொலைத் தொடர்பு முகாமையாளர்) அவர்களின் தந்தையாரின் மறைவுச் செய்திகேட்டு நாமும் அவரது குடும்பத்தினரின் துயரில் கலந்து கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
பணிப்பாளர்,
பணியாளர்கள்,
சர்வதேசத் தொலைத்தொடர்பு
நிலையம்.

(சி.12377)

## சாவு அறிவித்தல்



அமரர்

### ஆறுமுகம் மாரிமுத்து

வள்ளுவர்புரம் றெட்பானாவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட ஆறுமுகம் மாரிமுத்து 21.07.2005 நேற்று அகாலச் சாவடைந்தார். மங்கம்மாவின் அன்புக்கணவரும்,சித்திராதேவி (தமிழ்நிறை, மாவீரர்) ஜெயசேகரம் (நிதித்துறைசாரதி), கலைச் செல்வி (தமிழீழ போக்கு வரத்துக்கழகம்), பரமேஸ்வரி (காவல்துறை, கிளிநொச்சி), விஜயகுமார் (மாணவன்)ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வணயாமணி வெள்ளிச்சாமியின் அன்பு மாமனாரும், சத்தியமூர்த்தியின் மைத்துனரும், சதிஸ்குமார், சுரேஸ்குமார், சாந்தகுமார் ஆகியோரின் பேரனும், கோமதியின் அண்ணரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23.07.2003 நாளை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இதனை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்

தகவல்:-
**மகன் ஜெகசேகரன்**
நித்துறை சாரதி.

(6377)

# பொருட்கள் விலை குறைக்க முடியாமைக்கு ஜே.வி.பி யின் நடவடிக்கையே காரணம்

## -அநுரா பண்டாரநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) சில செயற்பாடுகளின் காரணமாகவே கூட்டமைப்பு அரசாங்கத்தினால் பொருட்களின் விலையைக் குறைக்க முடியாமல் போனதாக சுற்றுலாத்துறை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அநுராபண்டாரநாயக்க கூறியுள்ளார்.

வியாங்கொடவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அநுரா இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; ஒவ்வொரு அமைச்சரவைக் கூட்டத்தின்போதும் பொருட்களின் விலையை எவ்வாறு குறைக்கலாம் என்பது தொடர்பாகவே கலந்துரையாடுவோம். அதன் போதும் தான் இலங்கை மின்சார சபையையும், போக்குவரத்துச்சபையையும் நவீனமயப்படுத்துவது தொடர்பாக ஆராயப் பட்டது.

ஆனால் இதனை ஜே.வி.பி எதிர்த்தார்கள் ஆனால் இதற்கு மாற்றுத்திட்டம் ஏதாவது உண்டா என சனாதிபதி கேட்ட போது மாற்றுத் திட்டம் எதுவும் இல்லை. அதனைத் தாங்கள் எதிர்பார்ப்பதாகக் கூறினார்கள். இவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருந்தால் நாட்டை எவ்வாறு கட்டி எழுப்பமுடியும் எனவும் அநுரா அங்கு கேள்வி எழுப்பினார்.

## வன்னி தேர்தல் மாவட்ட திட்டமிடல் குழுக்கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வன்னித் தேர்தல் மாவட்டத்திட்டமிடல் குழுக்கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வன்னி புனர்வாழ்வு அமைச்சர் றிஷாட் பதியுதீன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், சதாசிவம் கனகரட்ணம், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோரும், வவுனியா, முல்லைத்தீவு மன்னார் அரச அதிபர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

## 3ஆம் கட்ட கொடுப்பனவு வழங்கல்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் சுனாமியினால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான மூன்றாம் கட்டக்கொடுப்பனவு கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் கிராமிய வங்கியின் ஊடாக வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இக்கொடுப்பனவானது வடமராட்சி கிழக்கின் மாமுனை தொடக்கம் கேடில் வரையான கிராமமக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கிழமை நாட்களில் இரு நாட்கள் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கென்று வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. (11)

## வீடமைப்புத்திட்டங்களைத் துரிதப்படுத்துக யாழ்.அரசாங்க அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கருதி மேற்கொள்ளப்படும் வீடமைப்புத்திட்டங்களைத் துரிதப்படுத்துமாறு அரசாங்க அதிபர் கே.கணேஸ் அதிகாரிகளைப் பணித்திருக்கிறார்.

வீடுகள் அமைக்கப்படும் பிரதேசங்களிற்குச்சென்று கட்டுமானப்பணிகளைப் பார்வையிட்ட பின்னரே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். இந்த வீடுகளைச் சர்வதேச தொண்டர் அமைப்புக்களும், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் நிர்மாணித்து வருகின்றன.

## மலையக தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர் நியமன விண்ணப்பங்களை இரத்துச் செய்ய ஏற்பாடு

பெருந்தோட்ட பகுதி தமிழ் பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை திருத்தம் செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மத்திய மாகாண சபையின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் நயிமுல்லர் தாக்கல் செய்த இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இதன்போது மனு விசாரணையை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைத்த நீதிமன்றம் குறிப்பிட்ட நியமனங்கள் தொடர்பில் கோரப்பட்டுள்ள விண்ணப்பங்களை இரதுச்செய்யும் வகையிலேயே இந்த ஒத்திவைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பெருந்தோட்டப்பகுதி தமிழ் பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனம் தொடர்பில் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 21ஆம் திகதி என்ற வகையில் அதனை மாற்ற முடியாது என கல்வி அமைச்சின் செயலர் மன்றிற்கு தெரிவித்த நிலையிலேயே திருத்தத்தற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட ஆசிரியர் நியமன வர்த்தமானியில் இந்து மற்றும் கத்தோலிக்க பாடங்களில் பரீட்சாத்திகள் சித்தியடைந்திருக்க வேண்டும் எனக்கோரப்பட்டிருப்பதானது இஸ்லாம் சமய பாடத்தில் சித்தியடைந்தவர்களின் அடிப்படை உரிமையை மீறுவதாக தெரிவித்தே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## முல்லை.தொழில்நுட்பக்கல்லூரி மாணவருக்கு ஈருருளி வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தொழில்நுட்பக்கல்லூரியின் இரு பயிற்சிநெறி மாணவர்களுக்கு உலககனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனம் (யூட்ஸ்) நிறுவனம் பாவனைக்கென 50 ஈருருளிகளை வழங்கியுள்ளது.

மின்னொட்டும் பயிற்சி நெறியைப் பயிலும் 25 மாணவர்களுக்கும். தையல் பயிற்சி நெறியைப் பயிலும் 25 மாணவர்களுக்குமாக மொத்தம் 50 பேருக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன. (20)

### நிறைவேற்று....

இதேவேளை எஸ்.பி திஸநாயக்க எந்தவித தவறையும் இணைக்க மாட்டார் எனவும் சனாதிபதி எஸ்.பி திஸநாயக்கவை விடுதலை செய்யத் தீர்மானித்தால் அதற்காகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சனாதிபதியைச் சந்திக்கத்தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### பொலிசாரின்...

அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வீதிச்சோதனைக்கெடுபிடிகள் தீவிரப்படுத்தப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் முடக்கிவிடப்பட்டுள்ளது. இதன்போது மட்டக்களப்பில் வீடுவீடாக சோதனைமேற்கொள்ளும் படையினர் விசாரணை என்ற பெயரில் மக்களைத் துன்புறுத்தியும் வருகின்றனர்.

### அரச....

மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் ,கிராம உத்தியோகத்தர்கள் அலுவலகங்கள் உட்பட அரச நிறுவனங்களைக் கண்காணிப்பதே அவர்களின் பொறுப்பாகும். இந்த நிறுவனங்கள் பொதுமக்களுக்குச் சிறப்பாக சேவையை வழங்குகின்றனவா? அவற்றிற்பணியாற்றும் ஊழியர்கள் ஒழுங்காக வேலை செய்கிறார்களா? என்பதைக்கண்டறிந்து சேவைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் இவ்வதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### லண்டனில்...

ஆயுதப்பொலிசார் தொடர்ந்தும் புலன் விசாரணைகளை நடத்திவருகின்ற அதேவேளை மூன்று சுரங்க ரயில் பாதைகளில் ரயில் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் தொடர்பாக இருவரைத் தடுத்து வைத்துள்ளதாகவும் லண்டன் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### அதிரடிப்படை....

மீதும், பொதுமக்கள் மீதும் சிறிலங்கா அரச படைகளும், தேச விரோதிகளும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். பாண்டிருப்பில் கிராம சேவகர் மீதான தாக்குதல்களும் இவற்றில் ஒன்றாகும். இவை தொடர்ந்து இடம்பெற்று வருவதால் இவற்றைப் பொறுக்க முடியாத நிலையில் இன்று அதிரடிப் படை மீது தாக்குதல் நடத்தியுள்ளோம் என்று அந்த அறிக்கையில் அம்பாறை சீறும் படைதெரிவித்துள்ளது.

## இலங்கை-மேற்கிந்தியத்தீவுகள் அணி இறுதி டெஸ்ட் போட்டி இன்று

இலங்கை, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும், இறுதியானதுமான டெஸ்ட் போட்டி இன்று அஸ்கிரிய மைதானத்தில் ஆரம்பிக்கிறது.

முதலாவது போட்டியில் வெற்றி பெற்றிருப்பதிலிருந்து இலங்கை அணி முன்னணியிலுள்ளது. தனது பந்து வீச்சு முறையால் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கும் மேற்கிந்திய வீரர் ஜனனியோன்சனும் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளார்.

## அவுஸ். வீரர் மெக்ராத் 500 விக்கெட்டைக் கைப்பற்றினார்!

(லண்டன்)

லண்டன் லோர்ட்ஸ் தைமானத்தில் ஆரம்பமான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய வீரரான மெக்ராத் 500 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றினார். இவர் உலகில் 500ஆவது விக்கெட்டைக் கைப்பற்றும் நான்காமவராவர்.

ஏற்கனவே மேற்கிந்தியத் தீவைச் சேர்ந்த வேகப்பந்துவீச்சாளர் வோல்சும், சுழல்ப்பந்துவீச்சாளர்களான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஷேன் வோர்னும், சிறிலங்காவைச் சேர்ந்த முத்தையா முரளிதரனும் 500 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர்களென்பதும் தெரிந்ததே.

## தமிழ்மொழித்தினவிழா

(வவுனியா செய்தியாளர்)

இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய தமிழ் மொழித்தின விழா நேற்று முன்தினம் வித்தியாலய அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஜெயநாயகி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் முல்லைமணி வே.சுப்பிரமணியம், சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கோட்ட,வலய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய இப்பாடசாலை மாணவிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (10)

## உட்கட்டமைப்பு அபிவிருத்தி பற்றி வவுனியாவில் கலந்துரையாடல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி காலை 10.30 மணிக்கு வவுனியா அரசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு, உட்கட்டமைப்பு, அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.டி திஸநாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சிவநாதன் கிஷோர், சதாசிவம் கனகரட்ணம் வவுனியா அரசஅதிபர் சி.சண்முகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

## தும்பளையில் வீடொன்றுக்கு விசமிகள் தீ வைத்தனர்

(வடமராட்சி)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பருத்தித்துறை தும்பளைப்பகுதியில் உள்ள நிரந்தர வீட்டுத்திட்டத்தில் உள்ள வீடு ஒன்றை இனந்தெரியாதோர் எரித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தும்பளை வோல்டன் பிரோஸ் வீதியில் அமைந்துள்ள குறிப்பிட்ட நிரந்தர வீட்டுத்திட்டத்தில் உள்ள இராசேந்திரம் ஆதவன் என்பவரது வீடே எரிந்து சாம்பலாகியுள்ளது.

குறித்த வீட்டிலிருந்தவர்கள் அருகிலுள்ள உறவினரின் வீட்டுக்குச் சென்ற சமயம் இனந்தெரியாத நபர்கள் இவ் வீட்டுக்குத் தீ வைத்துள்ளனர். அவர்கள் திரும்பி வந்து பார்த்தபோது வீடு எரிந்து கொண்டிருந்ததாகவும். இதன் பின்னர் அயலவர்களுடன் இணைந்து தீயை அணைத்துள்ளனர்.

இவ்வீட்டிலிருந்த 16 பவுண் நகைகள் ,மற்றும் ஒரு இலட்சம் பெறுமதியான வீட்டுத்தளபாடங்கள் , உடுபுடவைகள் உட்பட மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன. இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (கா)

## கருத்துப்படங்கள்

**வாசகர்களிடமிருந்து கருத்துப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. தரமான கருத்துப் படங்கள் ஈழநாதம் நாளேட்டில் பிரசுரிக்கப்படும்.**

அனுப்ப வேண்டிய முகவரி:
**பிரதம ஆசிரியர்,**
**ஈழநாதம், கிளிநொச்சி.**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.